உ

ஓம் பாலகணபதி துணை



அல்வாய் சாமணந்தறை

# ஆலடிப்பிள்ளையார் கோவில்

## பாலகணபதி மூர்த்தி பாமாலை


ஆக்கியோன்

திரு.சி.சிவநேசன் அவர்கள்



வெளியீடு:- சிவநேசன் சிறீமணிதேவி

மடத்துக்கடவை, அல்வாய் வடமேற்கு

2007.05.01

# ஆக்கியோன் உரை

நான் ஒரு மரபுக் கவிதைக் கவிஞனோ அன்றி மரபுமீறி இன்று வெளிவரும் புதுக்கவிதைக் கவிஞனோ அல்லன். என்னால் ஆக்கப்பட்ட இந்தப் பதிகம் எனது உள்மனத்தில் இருந்து உணர்வாய், ஊற்றாய் வெளிவந்தவையே. எனது பூர்வீகம் அல்வாய்க்கும் அரியாலைக்கும் சேர்ந்தது. எனது பெற்றோராகிய சிவநாமம் நவமணி தம்பதியினருக்க மூத்த மகனாகப் பிறந்து யாழ் ஆனந்தா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியினைக் கற்று, இடைநிலைக் கல்வியினை யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் (ஸ்ரான்லிக் கல்லூரி) கற்ற நிலையில் சிறந்தவொரு கட்டடக் கலைஞனாக விளங்கி குடும்ப பாரத்தைத் தாங்கிக்கொண்டவன். அரியாலையில் நான் வளர்ந்த சூழல் கலைக்குடும்பங்கள் மிளிர்ந்தனவாக விளங்கின. இந்த வகையில் எனது மாமனார் கவிஞர் வே.ஐயாத்துரை, கலாபூஷணம் V.K.இரத்தினம் ஆகியோரிடமிருந்து கவிதை யாக்கும் பரிச்சயமும், நாடகத்துறை சார்ந்த நடிப்பும் என்னிடமும் இயல்பாகவே கைவரப்பெற்றன. இதுவே எனது பொழுதுபோக்காகவும் மானசீகமான ஈடுபாடாகவும் கடந்த காலங்களில் என்னுடன் பின்னிப் பிணைந்திருந்தன. இவ்வாறான ஒரு பின்னணியில்தான் அண்மையில் வவுனியா நகரில் இருந்து எனது புகுந்த இடமான அல்வாயில் இருப்பை இஸ்திரப்படுத்திக்கொண்ட நிலை, என்னை அறியாமலே எனது வீட்டுக்கு வடக்கே அமைந்துள்ள எமது ஆலடியான் பாலகணபதி கோவில் கொண்டிருக்கும் ஆலயம் எனது நித்திய தரிசனத்துக்குரியதாக இருந்தது. அத்துடன் இந்த ஆலயத்துக்கும் எனத வீட்டுக்கும் இடையில் அமைந்துள்ள ஈமம் (சுடலை) இந்த இரண்டும் எனது மனத்தில் இன்னொரு

வகையான மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தியது. அது எனது மனத்தில் அநுபூதியாக உணர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளமை இப்பதிகம் பாடுவதற்கு ஒரு உந்துசக்தியாக இருந்தது.

அத்துடன் கடந்த ஒரு வருடகாலத்தில் எனது மனத்தில் குருதி உறையும் நிலைக்குரிய இரு சம்பவங்களான எனது மனைவி வழிவந்த மருமகன் மகேந்திரராசா மயூரன், எனது உடன்பிறப்பான ஜெயராசா ஜெயதீபன் ஆகியோரின் அகால மரணங்கள் எனது எதிர்பார்ப்புக்களை எல்லாம் சிதைவு பட வைத்த சோகம் நான் எடுத்துக்கொண்ட ஒரு சத்தியத்தின் பின்னணியில் எனது ஆலயதரிசனத்தை நிராகரித்த நிலையில் அதனையே எனது ஆன்மீக சிந்தனையாகக் கொண்டு ஆக்கப்பட்டதுதான் இந்தப் பதிகம். இதில் காப்பாகப் பாடப்பட்ட பதிகங்களை விட பதினெட்டு பதிகங்கள் வெண்பாவாக அமைந்துள்ளன. பாலகணபதி காப்புப்பதிகத்துடன் நான் வளர்ந்த அரியாலையூரில் அமைந்த எமது குலதெய்வமான சரஸ்வதிதேவியை எமது கல்வித்தாயை வேண்டி அமைத்துள்ளமை எனது குலதெய்வ வழிபாடாகும். எனவே எனது சிற்றறிவுக்கேற்ற வகையில் இப்பதிகங்கள்மூலம் எமது ஊரிலே அமைந்துள்ள எல்லாம் வல்ல எம்பெருமான் பாலகணபதி அருள் எம் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்றவாறு அமைத்துள்ளேன். இதில் ஏதாவது கவிதை மரபுக்கு மாறான அமைப்பு இருப்பின் அறிவுலகம் என்னை மன்னித்த, எனது உளவெளிப்பாடான பதிகத்தை ஏற்றுக்கொள்வதுடன், இதற்கு முன்பு இவ்வூர் சார்ந்த பல அறிஞர்கள் ஆக்கிய பதிகங்களுடன் எனது இந்தப் பாமாலையினையும் அடியவர்கள் தங்கள் வழிபாட்டில் ஈடுபடுத்திக்கொள்வார்கள் என நம்புகிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் இதனை அச்சுப்பதித்து நூலுருப்பெற உதவிய மதுரன் கிறாபிக்ஸ் ஸ்தாபனத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**சி.சிவநேசன்**

உ
சிவமயம்

**காப்பு**

எண்ணுமென் மனந்தனில் உன்துதிப்பாடல் புனைந்து
பண்ணிசையில் பாடிப்பதம் பணிந்தேன் கண்களின்
கருமணியாய் காக்கும் கணபதி எந்தன்
குருமணியாய் சொற்பதம் தா.

***கலைமகள் துதி***

நாவினில் நடமிடும் நாமகளே என்
பாவினில் நர்த்தனம் ஆடிடு வெள்ளைப்
பூவினில் அமர்ந்திடும் கலைமகளே எனை
மேவிநில் பாவினில் மேன்மையுற.

01. காரிய வெற்றிதரும் சித்திக் கணபதிகாண்
பாரினில் பகைஅழி வீரக்கணபதிகாண் நேரிய
செல்வம் மிகத்தரும் செல்வகணபதிகாண் நன்னூர்
அல்வாயில் பாலகணபதியான் காண்.

02. பாங்குறக் கிளைபரப்பி நிழலூட்டும் ஆலடியாம்
ஆங்குஉன் ஆலயம் கண்டு சால்புற ஓங்குமுன்
அருளாட்சி திருக்கோலம் களிப்புறக் கண்டுன்
திருவருளை வேண்டுவர் நின்று.

03. ஆலயம்சார் அழகுகண்டு அமைந்தவூர் மகிமைகண்டு
சாலவோர் ஆலடியில் நிழலும் கண்டே கோலமுடன்
நிகழும் சித்திரைத் திருவிழாவில் ஆலடியானை
அகமும் மலருமே கண்டு.

04. ஊன் ஒடுக்கி மனமொடுங்கி சதுர்த்தியாம் மாதமொரு
நோன்பிருந்து உனைநோக்கித் தொழுதிருந்தோம் காண்கிலையோ
பூணுமுன் மோனம் கலைந்தடியாரினை பாலகணபதியே
பேணுவாய் நலந்தந்து நாளும்.

05. கற்றவரை கற்றதன் பேறு பெற்றவரை உற்ற
நற்கலை முத்தமிழ் வித்தகரைத் தந்தகற்பகனை
அல்வையூர் எல்லையில் ஊர்முகம் பார்த்திருக்கும்
செல்வனாம் பாலகணபதியைத் துதி.

06. சீலத்தால் உயர் வோங்கி விளங்கு மல்வையூர்
ஆலடியில் கோயில் கொண்டருளும் மூலவனே
கோலமது பாலகணபதி உருவாகத் தொழுவாரை
ஆலமரத்து விழுதுவாய் தாங்கு.

07. உள்ளம் நிறைந்தவனே உண்டிப்பிரியனே உவந்தார்க்கு
அள்ளிக் கொடுப்பாய் ஐங்கரத்தால் வள்ளலே
வருமுன் அடியார் துயர் போக்கி ஆலடியில்
அருவரம் பலவும் கொடு.

08. அங்கணன் மகன் ஐங்கரனை அனவரதமும் தொழ
இங்கெமை அருகிடும் இடும்பை போய் மங்களம்
மருவிடும் மான்மியம் பொங்கிடும் ஆலடியான்
திருவருள் கிட்டிடக் காண்.

09. உன் சுவைக்கரிய கன்னலும் தேனும் முக்கனி பாலும்
இன்சுவைக் கமுதமும் எள்பொரியும் முன்வைத்து
ஆலடி எம் பதியான் பாலகணபதியானுனை துதித்தோம்
கோலமுடன் காட்டு முகம்.

10. துன்மனத் தெழும் கார்வினை போக்கி
நன்மனத் தெளிஞானந்தரும் இன்முகத்து
சீராளன் ஆலடியான் துயர்போக்கி ஆலடியில்
அருவரம் பலவும் கொடு.

11. ஊற்றாய் சுரக்குமுன் அருட் சுனையின்
தூற்றலில் நனைந்து நாளுமுனை போற்றிப்
பாடித்தாள் பணிவர் பாலகணபதி துணையென
நாடித் துதிப்பார்க்கு நாளுந்துணை.

12. அருளது பொழிந்திடும் மழையென மாயைஎனும்
இருளது விலகிடும் ஞாயிறு ஒளியென மருளது
விழிகளில் பயமது போக்கிடும் ஆலடியான்
விழிமலரெனும் கண்ணது விழித்திட

13. நமக்கினி யார்வேண்டும் நீயரு கிருக்கையில்
உமக்கினி எதுபதி ஆலடி ஏகிடு எமக்கினி
எதுவரும் படுமிடர் இடும்பையும் அற்றிடும்
விது அருள் தரு கணபதி வர.

14. துன்மனத் தெழும் கார்வினை போக்கி
நன்மனத் தெளி ஞானந்தரும் இன்முகத்து
சீராளன் ஆலடியான் என்று புகழ்பாடும்
பேராளன் பாலகணபதியை போற்று.

15. பொல்லாப் போரின் பெருந்துயரால் நாளுமிங்கு
அல்லலாய் அவதியுறும் மாந்தர்காண் எல்லோர்க்கும்
ஏற்றதோர் சமத்துவச் சீரினை பாலகணபதியே
தோற்றுவாய் புதுயுகம் காண.

16. மனம் மிகும் மகிழ்வொடு மனந்தனில் வைத்துன்னை
தினமதும் தீட்சண்யமாய் தொழுது உனதரும்
கமலப் பாதம் பணிவார் பாலகணபதி துணையென்பாரினை
உமதருட் கரத்தினால் அணை.

17. கோமயத்தில் உறைவானை ஆலடிக் கோமகனை
சேமந்தரும் ஆலமரத் துறைவானை ஓம்
எனும் எழுத்தினில் ஒன்றாகு முகத்தானை
அனுதினமும் அன்புடனே அஞ்சலிப்போம்.

18. எல்லை இல்லாச் சைவநெறி
என்றும் தளைத் திலங்கும்
அல்வை தனில் கோவில்
கொண்ட ஆலடி விநாயகனே
தொல்லை தரும் வினைகள்
தொலைத் தெமைக் காத்திட
வல்லபக் கணபதியே வருவாயே
வண்ணத் தேரின் மீதினிலே.

சுபம்!

# (அடங்காப்பிடாரி) சி.சிவநேசன்



திரு.சி.சிவநெசன் என்பவர் மக்கள் மனங்களில் அடங்காப்பிடாரி சிவநேசன் எனத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டவர். அவர் ஒரு நல்ல மேடை நாடக நடிகர் என்பதனை அறுபதுகளில் பல ஆயிரக்கணக்கான மேடைகள் ஏறிய யாழ்.சுண்டிக்குளி நாடகக் கலாமன்றத்தினரின் 'அடங்காப்பிடாரி' என்ற சமூகசீர்திருத்த நாடகத்தில் அடங்காப்பிடாரி 'கோகிலா' என்ற பாத்திரமேற்று ஜமாய்த்துவிட்டவர்.

இந்த நாடகம் மக்கள் மத்தியில் பேசப்பட்டதற்கு இவர் வகித்த நவநாகரிகப் பெண்பாத்திரமே முக்கிய இடம் வகித்தது. இதனை நெறிப்படுத்தி மேடையேற்றிய பெருமை அரியாலையூர்க் கலைஞர் குஞ்சிதபாதம், கவிஞர் வே.ஐயாத்துரை ஆகியோரைச் சார்ந்ததாகும். இவ்வாறு பல்வேறு நாடகங்களில் பாடியும் நகைச்சுவையாக வசனங்கள் பேசியும் கொண்ட அநுபவம் இவருக்கு கவிதை புனையும் ஆற்றலை ஊட்டியது என்றால் மிகையாகாது. கலைஞன் என்பவன் ஆக்க இலக்கியங்களில் மட்டுமல்லாமல் அவன் வகிக்கின்ற சகல காரியங்களிலும் தனது கலைத்துவத்தின் திறனை வெளிக்கொணரத் தவறுவதில்லை என்பதனை திரு.சி.சிவநேசன் மூலம் தரிசிக்கலாம். அன்னார் மேற்கொண்ட கட்டடக் கலையிலும் சிறந்த ஒரு சிற்பியாகத் திகழ்பவர். இவ்வாறே அவருடைய வாழ்க்கைக் கோலங்களிலும் கலைத்துவமான நெறியினை வெளிப்படுத்துவார். அவர் பிறந்த இடத்தில் மட்டுமல்லாமல் புகுந்த இடத்திலும் கலைத்துவப் பண்பு மிளிர்கிறது. அன்னார் இலங்கையின் பல்வேறு பாகங்களான யாழ்ப்பாணம், வன்னிப் பகுதிகள் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் கட்டடக் கலைஞராக விளங்கியவர். திரு.சி.சிவநேசன் அவர்கள் மட்டுமல்லாமல் அவரது சகோதரன் அகில இலங்கைச் சமாதான நீதவான் திரு.சி.சிவதாசன் அவர்களும் கவிதைபாடும் கலைத்துவத்தில் கைதேர்ந்தவர்கள். நல்லூரான் உற்சவகாலத்தில் இவ்விருவருடைய பக்திப்பாடல்கள் அவ்வப்போது தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரத் தவறுவதில்லை. அக்காலத்து வெளிவந்த ஈழத்துச் சினிமாப்படமாகிய 'வெண்சங்கு' என்ற திரைப்படத்தில் ஆணாகவும், பெண்ணாகவும் நடித்துள்ளமையினை தம்பிஐயா தேவதாசன் அவர்களின் குறிப்பில் இடம்பெற்றுள்ளமையினைக் காணலாம்.

'ராஜ்பவன்'
அல்வாய்.

செ.சதானந்தன்.J.P
(ஓய்வுபெற்ற அதிபர்)

மதுரன் கிறா(f)பிக்ஸ், ஒவ்செற் பிறின்ரேர்ஸ்,
அல்வாய். தொ.பே: 021 226 3099.